*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
ISSN: 2456-5148 (Online)
www.ngmtamil.in

களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026, p665-674** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# கூகை நாவல் வெளிப்படுத்தும் விளிம்புநிலை மாந்தர்கள்

*Marginalized Communities and their Lived Experience in the Novel "Kookai"*

**ஷைனி க.,**

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவெண்:23213014022005, தமிழாய்வு மையம், அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, தொலையாவட்டம் – 629 157. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு – 627 012.

**K. Shyni*,**

*Full-Time Ph.D. Research Scholar, Registration No.: 23213014022005, Centre for Tamil Studies, Annai Velankanni College, Tholayavattam – 629 157. Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu – 627 012.*
*ORCID ID: 0009-0007-8826-704X*

**முனைவர் க. அஜி,**

உதவிப்பேராசிரியர் மற்றும் நெறியாளர், அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, தொலையாவட்டம் – 629 157. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு – 627 012.

**Dr. K. Aji*,**

*Assistant Professor and Research Supervisor, Annai Velankanni College, Tholayavattam – 629 157. Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu – 627 012.*

*Article history*
Received: 20-08-2026
Revised: 20-08-2026
Accepted: 24-08-2026
**Published: 29-08-2026**
*Corresponding Author
Email:
Shyni.sherin1995@gmail.com

**Abstract:**
So. Dharman is one of the notable writers in modern Tamil literature who has documented the life and experiences of the people inhabiting the Karisal region. His novel Kookai records the intergenerational life experiences of oppressed people living on the margins of society. This study aims to examine the social, economic, and cultural dimensions of the lives of marginalized people as represented in the novel. The study focuses on how caste-based oppression, the atrocities of untouchability, landlessness, denial of access to water, exploitation of labour, drought, famine, and the marginalization of women are portrayed in the novel. It also examines how education and social awareness function as instruments for developing self-respect, a sense of rights, and social advancement among marginalized communities. The symbol of the 'Kookai', which forms the title of the novel, not only reflects the condition of people subjected to the oppression of dominant social groups but also expresses their awakening towards freedom from darkness and their aspiration to live with rights and dignity. In this way, Kookai stands as a significant literary work that records the lived experiences, struggles, social transformation, and quest for liberation of marginalized people.
**Keywords:** *Kookai, S. Dharman, Marginalized People, Karisal Region, Caste Oppression, Untouchability, Labour Exploitation, Social Awareness.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் நவீன இலக்கியத்தில் கரிசல் நில மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்த குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களுள் சோ. தர்மன் ஒருவர். அவருடைய *கூகை* நாவல் சமூகத்தின் விளிம்புநிலையில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்களின் தலைமுறையான வாழ்க்கை அனுபவங்களைப் பதிவு செய்கிறது. இவ்வாய்வு, நாவலில் வெளிப்படும் விளிம்புநிலை மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வியல் கூறுகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சாதிய ஒடுக்குமுறை, தீண்டாமைக் கொடுமை, நிலமின்மை, நீருக்கான உரிமை மறுப்பு, உழைப்புச் சுரண்டல், வறட்சி, பஞ்சம், பெண்களின் விளிம்புநிலை வாழ்க்கை ஆகியவை நாவலில் எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றன என்பது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கல்வி மற்றும் சமூக விழிப்புணர்வு விளிம்புநிலை மக்களின் சுயமரியாதை, உரிமை உணர்வு மற்றும் முன்னேற்றத்திற்கான கருவிகளாக எவ்வாறு அமைகின்றன என்பதும் ஆராயப்படுகிறது. நாவலின் தலைப்பாக அமைந்துள்ள 'கூகை' என்னும் குறியீடு, ஆதிக்கச் சமூகத்தின் ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் மக்களின் நிலையைப் பிரதிபலிப்பதோடு, இருளிலிருந்து விடுபட்டு உரிமையுடன் வாழ்வதற்கான அவர்களின் விழிப்புணர்வையும் வெளிப்படுத்துகிறது. இவ்வகையில், *கூகை* நாவல் விளிம்புநிலை மக்களின் வாழ்வியல், போராட்டம், சமூக மாற்றம் மற்றும் விடுதலைக்கான குரலைப் பதிவு செய்யும் முக்கியமான படைப்பாகத் திகழ்கிறது.

**திறவுச்சொற்கள்:** கூகை, சோ. தர்மன், விளிம்புநிலை மக்கள், கரிசல் நிலம், சாதிய ஒடுக்குமுறை, தீண்டாமை, உழைப்புச் சுரண்டல், சமூக விழிப்புணர்வு.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய உலகில் கரிசல் நில மக்களின் வாழ்வியலை அப்பட்டமாகப் பதிவு செய்த எழுத்தாளர்களுள் சோ. தர்மன் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவரது "கூகை" நாவல் சமூகத்தில் வெளிச்சத்திற்கு வராத ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை வரலாற்றைப் பேசுகிறது. பகலில் காக்கைகளால் கொத்தப்பட்டு இரவில் மட்டுமே வாழும் பறவை கூகை. கூகை என்ற குறியீட்டின் வழியாக ஒடுக்கப்பட்ட மக்களின் அக - புற போராட்டங்கள், நிலவுடைமைச் சமூகத்துடனான முரண்கள் மற்றும் சுதந்திரத்திற்குப் பிந்தைய அரசியல் மாற்றங்கள் அவர்களின் அன்றாட வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்களை வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும். கோவில்பட்டி வட்டாரக் கரிசல் நில விளிம்புநிலை மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வாழ்வியல் சூழல்களை விரிவாக இந்நூல் ஆராய்கிறது.

**விளிம்புநிலை மக்கள்**

சமூகத்தைத் தலித்தியச் சிந்தனையாளர்கள் "மையம்" எனவும், "விளிம்பு" எனவும் பிரித்துப் பார்க்கின்றனர். மையம் என்பது ஆதிக்கச்சாதியையும், அதிகாரத்தினையும் பொருளாதார வல்லாண்மையையும் குறிக்கிறது. விளிம்பு நிலை என்பது தாழ்த்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களைக் குறிக்கிறது.விளிம்பு நிலை ஆய்வுகள் குறித்து அ.மார்க்ஸ் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

"காலனிய வரலாறு எழுத்தியல் மற்றும் தேசிய வரலாறு எழுத்தியல் ஆகிய இரு நெறிகளுமே மக்களின் தன்னெழுச்சியான பங்களிப்பை, மேட்டிமைச் சக்திகளைச் சார்ந்திராத சுயேச்சையான பங்களிப்பை

மறைத்தன அல்லது கண்டு கொள்ளவில்லை. இவ்வாறு மேட்டிமை அணுகல் முறை என்பது வரலாற்று இயக்கத்தின் வெகு மக்கள் சார்பைப் புறக்கணிக்கிறது என அடித்தள நோக்கினர் விமரிசித்தனர். அடித்தள மக்களின் அரசியல் என்பது மேட்டிமை நிறுவனங்களைச் சார்ந்திராமல் சுயேச்சையான புலத்தில் இயங்குகிறது. உத்திகள் செயல்பாடுகள், அணிதிரட்டல்கள் என எல்லா அம்சங்களிலும் இது வேறுபட்டு நிற்கிறது. இவற்றை வெளிக்கொணர்வதும் எழுதுதலும் அடித்தள மக்கள் ஆய்வுகளின் நோக்கமாகிறது. ஆக காலனியவாதிகள் மற்றும் அவர்களை மறந்த தேசியவாதிகள் ஆகிய இருசாராரின் வரலாறுகளுமே மேட்டிமை வரலாறுகளாகவே இருந்தன. மேட்டிமை நோக்கை விமர்ச்சித்து எழுந்த வரலாற்றெழுதியலை அடித்தள மக்கள் ஆய்வு எனலாம்" என்கிறார். (விளிம்புநிலை ஆய்வுகளின் தமிழ்க்கதையாடல்கள், ப.எண் 11)

**கூகை நாவல் ஓர் அறிமுகம்**

சோ. தர்மன் எழுதிய "கூகை" தமிழ் நவீன இலக்கியத்தில் மிக முக்கியமான நாவல்களில் ஒன்றாகும் 2017 – ஆம் ஆண்டு வெளியான இந்நாவல் கோவில்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள கரிசல் நிலப்பகுதி பற்றியும் விளிம்புநிலை மக்களின் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களை ஆழமாகப் பதிவு செய்த படைப்பாகும். இந்திய சுதந்திரத்திற்கு முந்தைய காலத்திலிருந்து, சுதந்திரத்திற்குப் பிந்தைய சில வரலாற்று மாற்றங்களையும் கூறுகிறது.விளிம்புநிலை மக்களின் குறியீடு நாவலின் தலைப்பான "கூகை" – (ஒருவகை ஆந்தை) மிகப்பெரிய குறியீட்டுத் தன்மை கொண்டது. பகலில் காக்கைகளாலும் மற்ற சிறிய பறவைகளாலும் விரட்டி அடிக்கப்பட்டு, தற்காத்துக் கொள்ளத் தெரியாமல் ஒளிந்து வாழும் பறவை கூகை. ஆனால், அதற்கு இரவில் நல்ல பார்வைத்திறனும் ஆற்றலும் உண்டு. தன் பலம் உணராமல், ஆதிக்க சமூகத்திற்குப் பயந்து ஒடுங்கி வாழும் தலித் மக்களைப் பிரதிபலிக்கும் குறியீடாக **கூகை** பறவை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஊருக்கு வெளியே சேரிகளில் ஒதுக்கப்பட்டு வாழும் மக்களின் நிலமற்ற நிலை, நிலப்பிரபுக்களின் தயவில் விவசாயக் கூலிகளாக வாழும் மக்களின் உழைப்புச் சுரண்டல், பரம்பரை பரம்பரையாகத் துடிக்கும் புதிய தலைமுறையின் முயற்சியும் மக்களை வெறும் பரிதாபத்திற்குரியவர்களாக மட்டும் காட்டாமல், அவர்களின் வரலாற்றுப் பாதையையும், விழிப்புணர்வையும், தங்களின் ஆற்றலை உணர்ந்து மீண்டெழத் துடிக்கும் போக்கையும் வெளிப்படுத்தும் ஒரு காலத்தின் பதிவு ஆகும்.

**நாவலில் இடம்பெறும் விளிம்புநிலை மக்கள்**

நிலத்தை மையமாக வைத்து அமைகின்ற பொருளாதார கட்டமைப்பில் நிலமே அடிப்படை ஆதாரமாக அமைகிறது. எனவே நிலவுடைமையாளன் பொருளாதாரத் தளத்தில் மேம்பட்டவனாகவும் நிலமற்றவன் கீழான நிலையிலும் வைக்கப்படுகின்றான். இதன் மூலம் நிலம் எத்தகைய முறையில் இன்றியமையாததாக உள்ளது என்பதனை அறியமுடிகிறது. இந்தக் கருத்தினை முன் வைத்தே ஆசிரியரும் "அடேய் சீனி எனக்கு... அஞ்சு புள்ளைக, நஞ்சையும், புஞ்சையும் சேர்த்தா அஞ்சோட

ஆறுபுள்ள, அதனால செத்தாலும் விக்கமாட்டான். பூர்வீகச் சொத்த எங்க அய்யா எப்பிடி எங்கிட்ட ஒப்படச்சாரோ, அதே போல நானும் எம்புள்ளங்கிட்ட ஒப்படைச் சிட்டுக் கண்ணமூடணும் அத விற்பதற்கு நமக்கு என்னடா உரிம இருக்கு? தலமொற தலமொறையாக கைமாறி வர்ர பூர்வீகச் சொத்து, நான் சம்பாத்தியம் பண்ணியிருந்த நான் விக்கலாம்"2 (கூகை ப.எண்30) இவ்வரிகள் நடராஜய்யர் என்னும் பாத்திரத்தின் மூலம் பிரதிபலிக்கின்றன. நிலம் எவ்வளவு முக்கியமோ அதுபோலவே அந்நிலத்தினைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் முக்கியம். நடராஜய்யர் பள்ளக்குடி சனங்களின் குல தெய்வமாக விளங்குவதையும் ஊரை விட்டுபோகும் போது எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் அனைவருக்கும் தன் நிலங்களைக் கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டுச் செல்கிறார். சீனிக்கிழான் சொன்னால் சரி என்கிற அளவுக்கு அய்யருக்கும் பள்ளக்குடிச் சீனிக்கிழவனுக்குமான உறவு இருந்தது குறிப்பிடத்தக்கது. அய்யரின் வீட்டை கோயிலாய் நினைத்துக் கும்பிடுகிறான் சீனிக்கிழவன். தான் கும்பிட்டு வந்த கூகைச் சாமிதான் தங்களை வாழ வைத்திருக்கிறது என்கிறான்.

வேளாண் உற்பத்தியைப் பெருக்கி, தானியத் தவசங்கள் வீட்டிற்கு வரவும் ஒடுக்கப்பட்ட மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தனர்.எப்போது ஒருவனிடம் கைகட்டி நிற்கிறோமோ அப்போதுதான் பயம் உழைத்து உற்பத்தியைப் பெருக்கிய பிறகு எவனுக்கும் கைகட்டி நிற்க வேண்டியதில்லை. எங்கே தங்களுக்கு அடிமைகளாய் இல்லாமல் போய்விடுவார்களோ என்ற பயத்தில் செந்தூர்பாண்டி ஆட்கள் ஜமீனைத் தூண்டி விடுகிறார் என்ற செய்தியும் கூறப்பட்டுள்ளது.

**கூகை நாவலில் வெளிப்படும் வாழ்வியல் கூறுகள்**

வாழ்வியல் என்பது ஒரு குறிப்பிட்ட சமூகக் குழு அல்லது மனிதர்களின் சூழல், பண்பாடு, சமயம் மற்றும் வரலாற்றுப் பின்னணியில் எப்படி வாழ்கிறார்கள் என்பதையும் "உரிமைகளோடு மனிதர்களைச் சுதந்திரமாக வாழவைக்கும் சமூக அமைப்பே உயர்வானது" 3 (சமூகவியல் கோட்பாட்டு மூலங்கள் ப.எண் 21) என ஹேர்பேட் ஸ்பென்சர் என்ற அறிஞர் கூறுகிறார்.

சோ.தர்மனின் "கூகை" நாவலில் வாழ்வியல் என்பது ஒடுக்கப்பட்ட மனிதர்களின் அன்றாடப் போராட்டங்கள் அவர்களின் சுயம், இயற்கை சார்ந்த வாழ்க்கை மற்றும் சமூக மாற்றங்களுக்கு இடையே அவர்கள் தங்களின் அடையாளத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் முறைமையைக் குறிக்கிறது.

**சமூகக் கட்டமைப்பும் சாதியச் சூழலும்**

ஒரு சமூகத்தின் மக்கள், அச்சமூகத்தின் பண்பாடு, ஒழுங்குகள், நம்பிக்கைகளுக்கு அமைய வாழ்கின்ற மாறாக, சமூகத்தை அமைக்கும் இம்மக்களே அதன் ஒழுங்குகளையும் நியமங்களையும் மாற்றியமைக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர். எமது தனிப்பட்ட வாழ்க்கையும் சமூக வட்டத்திற்குள்ளேயே நிகழ்கின்றது."சமயம் தொடர்பான லௌகீக ரீதியான சமூகவியல் விளக்கமானது, கடவுள் மீதான மனித உளச் சார்பினைச் சார்ந்து. ஒரு சமூக உறுப்பினர் என்ற

வகையிற் புறவயமான சில ஒழுக்க ஆற்றல்களில் தங்கியிருப்பதாக உணரும் நிலையிற் சமூகத்திற்காக மக்கள் வாழ்கின்றனார்.4 (சமூகவியல் கோட்பாடு மூலங்கள் ப. எண் 57) எடுத்துரைக்கிறது.

சோ. தர்மன் நாவலில் சமூக கட்டமைப்பு சாதிய அடக்கு முறைகளையும் அதிகார ஒடுக்குமுறைகயையும் எடுத்துக்கூறுகிறார். ஊரின் மையப் பகுதியில் வாழும் நிலவடைமையாளர்களின் அதிகாரத்திற்கம், தீண்டாமைக் கொடுமைகளுக்கு ஆட்பட்டு வாழ வேண்டிய நிலையையும். தலைமுறை தலைமுறையாக அடிமை வேலை, பண்ணை வேலை செய்து, சுயமாகச் சிந்திக்கவோ அல்லது நிமிர்ந்து நிற்கவோ முடியாதவாறு மாற்றப்பட்ட சமூகச்சூழல் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை “மூக்கனின் வயிற்றில் எத்தி மல்லாக்க மிதித்துத் தள்ளினார் முத்துக்கருப்பனைக் கம்பால் தோளில் அறைந்து வயிற்றில் குத்தித் தள்ளினார். இருவரும் தரையில் மல்லாந்து கிடந்தபடி அவர் அடித்த அடிகளைத் தடுத்தார்கள். பலமாகக் கூப்பாடு போட்டார்கள்.(கூகை. ப.எண் 9, 10)

**பொருளாதாரச் சூழலும் வாழ்வாதாரமும்**

மனிதனின் வாழ்க்கைப் பொருளே ஆதாரமாக அமைகிறது.நாகரிக மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு உணவு, உறைவிடம் ஆகியவை அடிப்படைத் தேவைகளாக இருக்கின்றன் மனிதன் நாடோடியாக வாழ்ந்த நிலைமாறி ஓரிடத்தில் தங்கி வாழத் தொடங்கிய போது மனிதனின் தேவைகள் அதிக முக்கியத்துவம் பெற்றன. மனிதன் தனது தேவைகளை நிறைவு செய்துக் கொள்ளுவதற்கான மூலப்பொருட்களை இயற்கையிலிருந்தே கண்டறிந்து கொண்டான். என்பதை,

முற்காலப் பாண்டியர் காலத்தில் ஐந்து வகைப் பொருளாதாரம் இருந்தது, விவசாயப் பொருளாதாரம், கால்நடை வணிகம் போர்ப் பொருளாதாரம் என்பவை ஆகும். இவைகளில் விவசாயப் பொருளாதாரம் முக்கியமானதாக இருந்தது.(டாக்டர் பி. சந்திர சேகரன்)

கூகை நாவலின் மூலமாக பொருளாதாரச் சூழலை ஆராயும் போது சொந்தமாக நிலமில்லாமல், மானாவாரி விவசாயத்தைச் சார்ந்த கூலி வேலைகளையும் சாதி சார்ந்த பாரம்பரிய தொழில்களையும் மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்ட நிலை பற்றியும் கரிசல் நிலத்தக்கே உரிய வறட்சி, மழை பொய்ப்பதால் ஏற்படும் கடும் பஞ்சம் மற்றும் பட்டினி சூழல்களை எடுத்து கூறப்பட்டுள்ளது என்பதை, “கழுத ஒலகத்துல என்னத்த என்னத்தையோ அனுபவிக்கான், நம்ம இந்தக் களப்புக்கடச் சோத்தையாவது திம்பம்னுதான் போனது”. “அது கூடப் புடிக்கல புண்ணியவாளன்களுக்கு கீழே உக்காந்து கையேந்துனாக் குத்தமில்ல காலம் இப்படியோவா போயிரம். மேடுனு ஒண்ணு இருந்தா தாவுனு ஒண்ணு இருக்குமில்ல, மேட்டுல ஏறுனவன் தாவுக்கு ஏறங்காட்டுயேவா இருந்திருவான், ஆனைக்கு ஒரு காலம் வந்தா பூனைக்கும் ஒரு காலம் வராதா.(கூகை ப. எண்12) நாவலின் மூலமாக எடுத்து கூறியுள்ளார்.

**நிலம், நீர் மற்றும் உழைப்புச் சுரண்டல்**

https://doi.org/10.63300/kijts06022026.61

கரிசல் நிலத்து மக்களின் வாழ்வியலில் நிலமும் நீருமே அதிகாரத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளன. நிலத்தை மட்டுமே நம்பி வாழுகின்ற மக்களுக்கு நிலம் பொய்த்துவிட்டால் வறுமை தான் மிஞ்சும் நிலவுடைமையாளர்களே நிலத்தில் விளைச்சல் இல்லையென்றால் முதலுக்கும் கூட மோசமான நிலையில் அல்லல்படுவர். நிலத்தையும் நிலவுடைமையாளர்களையும் நம்பி வாழ்கின்ற உழைக்கும் மக்களோ விளைச்சல் இல்லையென்றால் மிகுந்த துன்ப துயரங்களுக்கு ஆட்பட்டது. எனவே விளைச்சலே எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்கின்ற அடிப்படை ஆதாரம் எனலாம். "மழை பெய்தால் மட்டுமே விளைவதும், இன்றேல் வறண்டு பாழாய்க் கிடப்பதுமான நிலத்தை மானாவாரி (வானம் பாத்த) நிலம் என்பர் (மானாவாரி மனிதர்கள் ப.எண் 4,5) எடுத்துக்கூறுகிறார். அரை ஏக்கர், ஒரு ஏக்கர் நிலம் வைத்திருக்கின்ற மானாவாரி விவசாயி மழை இன்மையாலும் அதனால் விளைச்சல் இல்லாமலும் இருக்கின்ற நிலைகளை விற்றுவிட்டு வேற்றூருக்குப் பிழைக்கச் செல்லுகின்ற காட்சியினைச் சித்திரித்துக் காட்டுகின்றனார். நாவலின் தொடக்கத்தில் விளிம்புநிலை மக்கள் முற்றிலும் நிலமற்றவர்களாக, நிலக்கிழார்களின் (நாயக்கர்கள் மற்றும் தேவர்கள்) பண்ணையாட்களாக வாழ்கின்றனர்.விதைப்பது முதல் அறுவடை செய்வது வரை அனைத்து உழைப்பையும் வழங்கும் இவர்கள், அறுவடைக்குப் பின் வெறும் "படிநெல்" அல்லது "தானியக்கழிவுகளை" மட்டுமே கூலியாகப் பெறுகின்றனர்.

நாவலில் ஊர்ப் பொதுக் கிணறுகளில் விளிம்புநிலை மக்கள் இறங்கவோ, நீர் எடுக்கவோ அனுமதி இல்லை. ஆற்றுப்படுகைகளில் தோண்டப்படும் "ஊற்றுக்குழிகளில்" நீர் எடுக்க அவர்கள் பல மணி நேரம் காத்திருக்க வேண்டும். மேல் சாதியினர் அந்த ஊற்று நீரை மட்டுப்படுத்துவது அல்லது பறித்துக் கொள்வது போன்ற நிகழ்வுகள் அவர்களில் அன்றாடப் போராட்டமாக நாவலில் சித்தரிக்கப்படுகின்றன.

"உலர்ந்த நிலத்தில் உதிரும் நெல்மணிகள்... சாம்பலாகிப்போன சக்கிலியக்குடி இருந்த இடத்தில் களம் செதுக்கினார்கள், நேற்றுவீடு... இன்று களம்... நாளை வனம்! வனம் மாறி வீடு! செதுக்கித் தள்ளிய புற்களையும் குப்பை கூளங்களையும் கூடைகூடையாகப் பெண்கள் சுமந்து ஓடயில் கொண்டுபோய்ப் போட்டார்கள். தண்ணீர் சுமந்து தட்டுப் பலகைகளால் அறைந்து இறுக்கி மட்டம் போட்டார்கள்".(கூகை 69-70)

**தீண்டாமைக் கொடுமைகளும் அவமதிப்புகளும்**

கூகை நாவலில் அன்றாட வாழ்வில் நிகழும் தீண்டாமைக் கொடுமைகள் மக்கள் உணர்ந்து கொள்ளும் வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஊர்ப் பொதுக் கிணற்றில் நீர் எடுக்க தடை, மேலாதிக்கச் சாதியினரைக் கண்டால் உடம்பைக் குறுக்கிக் கொண்டு பணிந்து நிற்கும் கட்டாயம் என மனித கண்ணியத்திற்கு எதிரான சூழல் நிலவுகிறது. விளிம்புநிலை மக்கள் இத்தகைய அவமதிப்புகளைத் தங்களின் விதியாகவே ஏற்றுவாழப் பழக்கப்படுத்தப்பட்ட சோகமான சூழல் நாவலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

நாகரிகமற்ற இந்த அடிமைத்தனம் பெயரளவில் பிரிட்டிஷ் அரசால் 1854 -இல் ஒழிக்கப்பட்டது என்னும் அது ஏட்டளவில்தான் இருக்கிறதேயொழிய அச்சட்டம் முழுமையாக அமல்படுத்தப்படவில்லை. பரிதாபகரமான பறையர்கள் வாழும் பறச்சேரியில் அவர்களுக்கென்று சொந்தமான கிணறு அல்லது சிறியகுளம் இல்லையெனில் "வறட்சி அப்பகுதியிலுள்ள குட்டைகளை வற்றிடச் செய்யும் போது தர்மசிந்தையுள்ள ஓர் உயர்சாதியின் நீர் இறைத்துத் தரும் வரையிலும் சாதி இந்துக்கள் பயன்படுத்தும் கிணறுகளின் பக்கத்தில் பறச்சேரியில் வாழுவோர் காத்து நிற்க வேண்டும்". சமூகரீதியாக அமிழ்த்தப்பட்டுள்ள பறையரின் நிலையைக் கூப்பர் என்னும் கவிஞர் பின்வருமாறு கூறுகிறார்.

"என் நிலத்தைப் பண்படுத்திட
ஓர் அடிமையை வைத்தக் கொள்ளேன்
என்னைச் சுமக்கவும் நான் துயில் கொள்ளகையில்
காற்றாடியை வீசவும் நான் எழுகையில் நடுங்கவும்
ஓர் அடிமையை வைத்துக் கொள்ளேன்
செல்வம் எனக்கு எத்துணையோ
வளங்களைத் தந்திடினம் நாளை
ஓர் அடிமையை வைத்துக் கொள்ளேன்" (தலித் மக்களும் கல்வியும் ப.எண் 32)

ஆனால் பறையருக்கு ஏற்படும் இச்சமூகப் புறக்கணிப்பு மிக எளிதான முறையில் மாற்றங்களை கொண்டு வரலாம். முதலில் மக்கள் தங்களின் வாழ்க்கை சூழல்களை மாற்றி அமைக்கும் நிலைகளை கூகை நாவலில் ஊடாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

**சாதிய ஒடுக்குமுறையும் சமூகப் புறக்கணிப்பும்**

*கூகை* நாவலில் சாதிய ஒடுக்குமுறையும் சமூகப் புறக்கணிப்பும் விளிம்புநிலை மக்களின் அன்றாட வாழ்வியலோடு பின்னிப் பிணைந்திருப்பதை சோ. தர்மன் வெளிப்படுத்துகிறார். சாதி அடிப்படையில் உருவாக்கப்பட்ட சமூகப் படிநிலைகள், ஆதிக்கச் சாதியினரின் அதிகாரம், தீண்டாமை, அவமதிப்பு, அடிமை வேலை, சமூக உரிமைகள் மறுப்பு போன்றவை விளிம்புநிலை மக்களின் வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கின்றன. குறிப்பாக, ஊரின் மையப்பகுதியில் வாழும் நிலவுடைமையாளர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டு, ஊருக்கு வெளியே ஒதுக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களின் நிலை நாவலில் சித்திரிக்கப்படுகிறது.

பொதுக்கிணற்றில் நீர் எடுக்கத் தடை விதித்தல், ஆதிக்கச் சாதியினரைக் காணும்போது பணிந்து நிற்கச் செய்தல், உழைப்புக்கேற்ற கூலி வழங்காமை போன்ற செயல்கள் சமூகப் புறக்கணிப்பின் வெளிப்பாடுகளாக அமைகின்றன. இவ்வாறான ஒடுக்குமுறைகள் பொருளாதார நிலையில் மட்டுமல்லாது, அவர்களின் தன்மானம் மற்றும் மனித உரிமைகளையும் பாதிக்கின்றன. இதனை, "மூக்கனின் வயிற்றில் ஏத்தி மல்லாக்க மிதித்துத் தள்ளினார்..." என்ற நாவல் நிகழ்வு வெளிப்படுத்துகிறது.

மேலும், நீர் போன்ற அடிப்படைத் தேவைகளைக்கூட சாதிய அடிப்படையில் மறுக்கும் நிலை நாவலில் சுட்டிக்காட்டப்படுகிறது. பொதுக்கிணறுகளில் நீர் எடுக்க முடியாத நிலையில், ஆற்றுப்படுகைகளில் தோண்டப்படும் ஊற்றுக்குழிகளில் நீருக்காகக் காத்திருக்கும் அவலநிலை விளிம்புநிலை மக்களின் சமூகப் புறக்கணிப்பைத் தெளிவுபடுத்துகிறது.

எனவே, *கூகை* நாவலில் சாதிய ஒடுக்குமுறை என்பது தனிப்பட்ட மனிதர்களின் செயலாக மட்டுமல்லாமல், சமூக அமைப்பின் வழியாகத் தலைமுறை தலைமுறையாகத் தொடரும் அதிகாரக் கட்டமைப்பாக வெளிப்படுகிறது. அதேவேளையில், கல்வி, விழிப்புணர்வு மற்றும் சுயமரியாதையின் வழியாக இம்மக்கள் தங்கள் உரிமைகளை உணர்ந்து மக்கள் ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்குவதையும் நாவல் பதிவு செய்கிறது.

**பெண்களின் விளிம்புநிலை வாழ்க்கை**

தலித் பெண்கள் குடும்பத்திலும், சமூகத்திலும் ஆணோடு சமத்துவம் இன்றி வாழ்கின்ற நிலையையும் காலம் காலமாக ஆண்களிடம் அடிமைப்பட்டு அல்லல்படுவதையும், சுயமாகச் சிந்திக்கும் திறனற்றுத் தன்னிச்சையாக வாழ முடியாமலிருப்பதையும் மையமிட்டு கூகை நாவலில் சோ. தர்மன் கூறுகிறார். "இந்தியாவில் தற்செயலாகத் தலித்தாகப் பிறக்க நேரிடுகிறது. பெண்பால் ரீதியாகத் தலித் ஆடவனைக் காட்டிலும் "தாழ்ந்தவர்"எனவும் மத ரீதியில் "இழிந்தவள்" எனவும் அடையாளம் படுத்தப்படுகிறாள்" என்பதை (தலித் கருத்தாடல் ப.84) அந்தோணி குருசு கூறியுள்ளார்.

கடினமான சூழலிலும் குடும்பத்தைக் காப்பாற்றப் போராடும் கூர்மையான புத்திசாலித்தனமும் தன்னம்பிக்கையும் கொண்டவர்களாக சோ.தர்மனால் பெண் பாத்திரபடைப்புகள் படைக்கப்பட்டுள்ளனர். கருப்பி மூலையில் உட்கார்ந்து அழுது கொண்டிருக்கிறாள். மகள் வெள்ளையம்மாள் இருட்டுக்குள் தீப்பெட்டியைத் தேடி விளக்கைப் பற்ற வைத்தாள். அவள் விடும் அனல் மூச்சில் தீக்குச்சி அணைந்து போனது. அய்யா வேற ஊருக்குப் போவோம். இந்த மானங்கெட்ட பொழப்பு வேண்டாம் என்று சொல்லும் மகளிடம் "என்னம்மா செய்ய பள்ளக்குடி, சங்கிலியக்குடில அந்தச் சண்டாளங்களோட அருணாக்கயிறுபடாத பொம்பளையே இருக்க மாட்டா, காலம் அவுக காலமாகப் போச்சு, அழிச்சாட்டம் பண்றாங்க(கூகை ப.15) என்கிறான் சண்முகம்.

**கல்வி அதிகாரம் சமூக முன்னேற்றத்திற்கான அடையாளங்கள்**

சமநீதி, மனிதனின் மாண்பு, தன்மானம் ஆகியவற்றை நிலைநாட்டுகின்ற "மனிதம்" என்கிற உன்னத, உயரிய பொருளை அடிப்படையாகக் கொண்டு எழுகின்றது. சாதி, விதி போன்றவற்றை அறவே களைவதற்குத் தேவையான மன உணர்வை வளர்கிறது. தாழ்வு மனப்பான்மையை நீக்கி, விடுதலை உணர்வை நல்கி, மனிதர்களாக நடைபோட வழிகாட்டுகிறது. மனிதரை மனிதராய், மனிதத் தன்மையுடன் வலம் வர வேண்டுகோள் விடுப்பதாய் அமைகிறது. தலித்துக்களில் அடையாளம் பிறப்பில் அடிப்படையில் மக்களாக எண்ணப்படாமல் தாழ்த்தப்படுபவர்களாகவும், தேவைக்கென்று பயன்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் புறக்கணிக்கப்படுபவர்களாகவும். அடையாளப் படுத்தப்படுகின்றனர், தலித்துகள். "காவக்காரக் கம்பைக் குடிசையின் வாசலில் சாத்தினார்.

செருப்புகளைக் கழற்றி வாசலின் முன்னால் விட்டெறிந்தார். கருப்பி புரிந்துகொண்டாள். பருந்தின் நிழல்கண்டு பதுங்கியோடும் கோழிக்குஞ்செனப் பாய்ந்தோடிப் பற்றி பிடித்தாள் முத்தையாப் பாண்டியனின் பாதங்களை". (கூகை 56-57)என்பதை சோ. தர்மன் நாவலில் பகலில் அடங்கி ஒடுங்கி வாழும் மக்கள், தங்கள் ஆற்றலையையும் உரிமைகளையும் உணர்ந்து விழிப்புணர்வாக மாறுவது முன்னேற்றத்தின் முதல் அடையாளம் என்பதை கூறப்பட்டுள்ளது. பறையன் பெரும்பாலும் கல்வியறிவில்லாதவனாகும் சமூகநீதியில் தாழ்த்தப்பட்டவனாகவும் இருக்கிறபடியால் நல்ல நிலையிலுள்ள அவனுடைய அயலகத்தார் எவ்வித மன உறுத்தலுமின்றி அவனை விழுங்கப் பார்க்கின்றார்கள். பெரும்பாலானவர்கள் கடைபிடிக்கும் தந்திரம் யாதெனின் பறையன் ஒருவனுக்குக் கடனாகப் பணத்தைக் கொடுப்பது ஆகும். திருப்பிச் செலுத்த முடியாத அளவிற்குக் கூடுதலான வட்டிக்குக் கடனைக் கொடுப்பார்கள். கூகை நாவலில் கல்வி என்பது வெறும் எழுத்தறிவுடன் நின்றுவிடாமல் அதிகார அமைப்புகளைக் கேள்வி கேட்கும் முதன்மை ஆயுதமாக முன்வைக்கிறது. பழைய தலைமுறையினர் சுரண்டலைத் தங்களின் விதியாக ஏற்றுக்கொண்ட நிலையில், கல்வி கற்ற இளம்தலைமுறையினர் அநீதிகளையும் எதிர்த்துப் பேசத் தொடங்குகின்றனர்.

**விடுதலைக்கான குரல் சமகால சமூகத்துடன் ஒப்பீடு**

நாவலில் வெளிப்படும் சமூக விழிப்புணர்வு இன்று கல்வி மற்றும் தொழில்நுட்பப் பயன்பாட்டின் வழியாக இளம் தலைமுறையினரிடம் சட்ட உரிமைகளாகவும் சுயமரியாதையாகவும் உருவெடுத்துள்ளது. அக்கணத்தில் சடங்குகள் மூலம் சாதியம் நிலைநிறுத்தப்பட்டது போல, இன்றைக்கும் டிஜிட்டல் ஊடகங்கள் மற்றும் கலாச்சாரக் குறியீடுகள் வழியாக மறைமுகமாகச் சாதியப் பெருமிதங்கள் பரபப்படுகின்றன. நாவலில் விவரிக்கப்படும் சாதிய வன்முறைகளின் வடிவம் மட்டுமே மாறியுளள்தே தவிர, சமகாலத்தில் அது ஆணவக் கொலைகளாகவும் மறைமுகம் புறக்கணிப்புகளாகவும் தொடர்கிறது.

**முடிவுரை**

சோ. தர்மன் கூகை நாவல் தமிழ் இலக்கியத்தில் விளிம்பு நிலை மக்களின் வரலாற்றை அவர்களின் வாழ்க்கைமுறையில் பொருத்திப் போகும் வகையில் பதிவுச் செய்த ஒரு மகத்தான நாவல் ஆகும். சாதிய ஒடுக்குமுறைகள் வடிவங்களை மட்டுமே மாற்றிக்கொள்கின்றனவே தவிர, அவை முற்றிலும் மறையவில்லை என்பதை நாவல் நுட்பமாக உணர்த்துகிறது. அதே வேளையில் தங்களின் சுயமரியாதையையும் ஆற்றலையும் உணர்ந்து கூகையைப் போல இருளைக் கிழித்தக் கொண்டு வெளியேறத்துடிக்கும் விளிம்பு நிலை மக்களின் அரசியல் விழிப்புணர்வே இந்நாவல் வெளிப்படுத்தும் செய்தி ஆகும்.

**துணைநூற்பட்டியல்**

1. அலெக்ஸ், வே. *தலித் இலக்கியமும் சமூக விழிப்புணர்வும்*. 2022.
2. அந்தோணி குருசு. *தலித் கருத்தாடல்கள்*. 2004.
3. கருணாமூர்த்தி, நா. *தமிழ் நாவல்களில் விவசாயத் தொழிலாளர்கள்*. 2012.

4. சந்தனமாரியம்மாள், கோ. *சோ. தர்மன் வாழ்வும் படைப்பும்*. 2023.
5. சண்முகலிங்கன், என். *சமூகவியல் கோட்பாட்டு மூலங்கள்*. 2008.
6. சூரியகாந்தன். *மானாவாரி மனிதர்கள்*. 1999.
7. தர்மன், சோ. *கூகை*. 2027.
8. ஞான திரவியம், ந. *சமகாலப் படைப்புகளில் சாதி*. 2008.
9. மார்க்ஸ், அ. *விளிம்பு நிலை ஆய்வுகளும் தமிழ் கதையாடல்களும்*. 2009.
10. சுகிர்தா பஸ்மத், இரா. ச. *தலித் இலக்கியமும் சமூக விழிப்புணர்வும்*. 2009.

**References:**

[1.] Alex, V. *Dalit Literature and Social Awareness*. 2022.

[2.] Anthony Gurus. *Dalit Discourses*. 2004.

[3.] Chandhanamariyammal, K. *S. Dharman: Life and Works*. 2023.

[4.] Dharman, So. *Kookai*. 2027.

[5.] Gnanathiraviyam, N. *Caste in Contemporary Literary Works*. 2008.

[6.] Karunamoorthy, N. *Agricultural Labourers in Tamil Novels*. 2012.

[7.] Marx, A. *Marginal Studies and Tamil Narratives*. 2009.

[8.] Shanmugalingam, N. *Sources of Sociological Theories*. 2008.

[9.] Sukirtha Basmath, Ira. S. *Dalit Literature and Social Awareness*. 2009.

[10.] Suriyakandhan. *Manavari Manithargal*. 1999.

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

KALANJIYAM